கிறார்கள் என்று சொல்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் பின்னால் இதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்லி அதைத் தள்ளி வைத்துவிடுகிறேன்.

(ix) செய்தித் துறை அமைச்சர்மீதான அவையுரிமைக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தாற்போல், திரு. கோ. பூவராகன் அவர்கள் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு அவை உரிமைக் கேள்வி கொண்டு வந்திருக் கிறார்கள். ஆனால், அதில் எழுதியிருக்கும்படியான வாசகம் இந்தப் பேரவையில் சொல்லக்கூடிய வாசகமாக இல்லாத காரணத்தினால், அதை நான் என்னுடைய அறையிலேயே தள்ளுபடி செய்து விட்ட தாக இங்கே அறிவிக்கிறேன்.

(x) பேரவைத் தலைவர்மீதான அவையுரிமைக் கேள்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் என்மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக் கிறார்கள். பேரவைத் தலைவர்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வருவது எங்கும், எந்த நாட்டிலும் கேள்விப்படாத ஒன்று. அதனுடைய முற்பகுதி பூராவும் என்மீது சொல்லப்படுவதாக இருக்கிறது. ஏதோ சில சில நேரங்களில் நான் அவர்களுக்கு நேரம் கொடுக்கவில்லை, எனவே அது அவை உரிமையை மீறியதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து என்மீது குற்றங்குறை சொல்வதாக இருந்தால், இந்தப் பேரவையிலே சொல்ல முடியாது. ஏனென்றால் இந்தப் பேரவையில் எனக்கு, விவாதம் செய்ய உரிமை கிடையாது. ஆகையினால், விதிகளின்படி நீங்கள் என்மீது ஏதாவது சொல்லவேண்டுமென்றால், உரிமைக் குழுவிடம் சொல்லி, அவர்கள் அதற்கு தீர்ப்புச் சொல்லவேண்டும். நீங்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்து, என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்வதற்காக வேண்டி உங்களுக்கு அவகாசம் கொடுக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I withdraw the Privilege Motion given notice of against the Hon. Speaker.

(2) நடைமுறைக் கேள்வி—தொடர்ச்சி

(ii) நீதி விசாரணையிலிருக்கும் பொருள் குறித்து ஆற்றப்படும் உரையின் வரையறைகள்

DR. H. V. HANDE : Now I want to raise a point of order. I would like to get some clarification with regard to the rules of the Assembly. Rule 31 relates to questions and Rule 67 relates to speeches.

MR. SPEAKER : Rule 67 is with regard to speeches and Rule 68 is with regard to motions.

DR. H. V. HANDE : I am saying that Rule 31 is with regard to questions and Rule 67 is with regard to speeches. Rule 31 precludes us from raising matters on which a judicial